



# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

# வனம்

## மானியக் கோரிக்கை எண். 54

அறிவிப்புகள் 2022 - 2023

**கா. ராமச்சந்திரன்**
வனத்துறை அமைச்சர்

## சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

# வனம்

## மானியக் கோரிக்கை எண். 54

அறிவிப்புகள்
2022 - 2023


**கா. ராமச்சந்திரன்**
வனத்துறை அமைச்சர்

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்
மற்றும் வனத்துறை

# வனம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வனத்துறை சார்பில் 13 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

**கா. ராமச்சந்திரன்**
வனத்துறை அமைச்சர்

## 1) திருப்பூரில் உள்ள நஞ்சராயன் குளம் புதிய பறவைகள் சரணாலயமாக அறிவிக்கை செய்யப்படும்.

திருப்பூரில் உள்ள நஞ்சராயன் குளம் வலசை பறவைகளுக்கான குளிர்கால இருப்பிடமாகவும், இனப்பெருக்கம் செய்வதற்கான முக்கிய இடமாகவும் உள்ளது. இந்த குளம், நீர், நில வாழ் உயிரினங்கள், தாவர இனங்கள் மற்றும் சுமார் 130 பறவை இனங்களுக்கான வாழ்விடமாக உள்ளது. எனவே திருப்பூரில் உள்ள நஞ்சராயன் குளம் தமிழ்நாட்டின் 17வது பறவைகள் சரணாலயமாக அறிவிக்கை செய்யப்படும். இங்கு உள்ளூர் மக்களுக்கும் பார்வையாளர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த பறவைகள் விளக்க மையம் ஒன்று அமைக்கப்படும். இம்மையம் பறவைகள் குறித்த பாதுகாப்பு, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு செயல்படும். இதற்காக அரசால் ரூபாய் 7.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2) கிராமந்தோறும் மரகதப் பூஞ்சோலைகள் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு அரசு, வனத்துறையின் முயற்சியாக இந்த ஆண்டில் 100 கிராமங்களில் மரகதப் பூஞ்சோலைகள் ஏற்படுத்தப்படும். வனத்தையொட்டியுள்ள கிராமங்களில் இப்பசுமை சோலைகள் ஏற்படுத்தப்படும். இவை ஒவ்வொன்றும் சுமார் ஒரு ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டிருக்கும். இந்த மரகதப் பூஞ்சோலைகள் உள்ளூர் கிராமத்தின் மரம் மற்றும் ஊரக விறகுத் தேவைகளை நிறைவேற்றுவதுடன், நீர்நிலையை மேம்படுத்தி சூழலியல் சேவைகளை வழங்குவதோடு பல்வேறு பொழுதுபோக்கு வசதிகளையும் வழங்கும். கிராமத்தின் பொது நலனுக்காக உள்ளூர் சமூகம் இந்த சோலைகளிலிருந்து பொதுப்பயன் உரிமைகளைப் பெற்றிருக்கும். இந்த மரகதப் பூஞ்சோலைகள் 100 ஹெக்டேர் பரப்பளவில் ரூபாய் 25 கோடி செலவில் உருவாக்கப்படும்.

## 3) காவிரி தெற்கு வன உயிரின சரணாலயம் ஏற்படுத்தப்படும்.

காவிரி தெற்கு வன உயிரின சரணாலயம் என்ற புதிய வன உயிரின சரணாலயம் சுமார் 478 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் ஓசூர் கோட்ட அஞ்செட்டி, உரிகம் மற்றும் ஜவளகிரி சரகங்களின் வனநிலங்களை உள்ளடக்கி அமைக்கப்படும். இச்சரணாலயம் காவிரி வடக்கு வனஉயிரின சரணாலயத்தை ஒட்டி அமைய உள்ளது. இந்த சரணாலயம் இந்தப் பகுதியில் ஒரு பெரிய மற்றும் தொடர்ச்சியான பாதுகாக்கப்பட்ட வனஉயிரின வாழ்விடத்தை உருவாக்க உதவும். இந்தப் பகுதி யானைகளின் முக்கியமான வாழ்விடமாகும். மேலும் இது சுமார் 35 வகையான பாலூட்டிகள் மற்றும் 238 வகையான பறவையினங்களின் வாழ்விடமாக உள்ளது. இது லையத் மென்மையான ஓடுகள் கொண்ட ஆமைகள், சாம்பல் நிற அணில்கள், மென்மையான ரோமம் கொண்ட நீர் நாய்கள், சதுப்பு முதலைகள், நான்கு கொம்புகள்

கொண்ட மான்கள் மற்றும் சிறிய மீன் கழுகுகள் போன்றவற்றை பாதுகாப்பதில் பெரும் பங்காற்றும். இந்த சரணாலயம் புலிகளுக்கு உகந்த வாழ்விடமாகவும் உள்ளது. இந்த சரணாலயத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க அரசால் ரூபாய் 5 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 4) திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் தேவாங்கு வன உயிரின சரணாலயம் ஏற்படுத்தப்படும்.

இந்தியாவின் முதல் தேவாங்கு வன உயிரின சரணாலயம் தமிழ்நாட்டின் திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய வனப்பகுதிகளில் அமைக்கப்படும். தேவாங்கு (Slender Loris) தென்னிந்திய தீபகற்ப வாழ்விடப் பகுதிகளில் காணப்படும் அரியவகை விலங்காகும். தேவாங்கு இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச அமைப்பால் (IUCN) "அழியும் விளிம்பில் உள்ள இனம்" எனப் பட்டியலிடப்பட்டுள்ளது. தேவாங்கு வன உயிரின சரணாலய அறிவிப்பு இந்த அரிய இனத்தின் பாதுகாப்பு மற்றும் அறிவியல் பூர்வமான மேலாண்மைக்கு உதவும். இந்த அறிவிப்பிற்கான கணக்கெடுப்பு, மதிப்பீடுகளை உள்ளடக்கிய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க இந்த ஆண்டில் ரூபாய் 5 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 5) மின்சார இரு சக்கர வாகன பயன்பாட்டின் மூலம் பசுமையாக்கம்.

தமிழ்நாடு அரசு வனத்துறையின் முன்னோடி முயற்சியாக கள ஊழியர்களின் பயன்பாட்டிற்காக ரூபாய் 2.32 கோடி செலவில் 256 மின்சார இரு சக்கர வாகனங்களை கொள்முதல் செய்து வழங்க உள்ளது. இந்த நடவடிக்கையானது, கரிம மாசு நிறைந்த புதை படிவ எரி பொருட்கள் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கும், வனப் பாதுகாப்பில் மாசற்ற மற்றும் பசுமையான ஆற்றலை மேம்படுத்துவதற்கும், வனத்துறையின் பங்களிப்பை வலுப்படுத்தும். இந்த முயற்சி ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு முகமை மற்றும் தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும், "காலநிலை மாற்றத்திற்கான பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் பசுமைத்திட்டம்" மூலம் மேற்கொள்ளப்படும்.

## 6) நீலக்கரிம உள்ளிருப்புக்கான முன்னெடுப்புகள் - அலையாத்தி காடுகள் மற்றும் பவளப்பாறைகள் பாதுகாப்பு.

நீலக்கரிம உள்ளிருப்புக்கான முன்னெடுப்பிற்கு பெரிய ஊக்கமளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசால் ரூபாய் 4.14 கோடி செலவில் மாபெரும் அலையாத்தி காடுகளின் மீளுருவாக்கம் மற்றும் நடவுப் பணிகள் 1050 ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்படும்.

கடல் சூழல் அமைப்பில் பவளப்பாறைகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. கடல் வளங்கள் வணிக ரீதியாக அதிகமாக பயன்படுத்தப்படுவதால், பவளப்பாறைகள் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. மன்னார் வளைகுடாவில் 3.6 ஹெக்டேர் பரப்பளவில் பவளப் பாறைகளின் மீளுருவாக்கப் பணிகளுக்காக 3.6 கோடி ரூபாய் செலவில் பவளப்பாறைகளின் ஆராய்ச்சி, கண்காணிப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள் அரசால் மேற்கொள்ளப்படும். ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு முகமை மற்றும் தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும், "காலநிலை மாற்றத்திற்கான பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் பசுமைத்திட்டம்" மூலம் மேற்கொள்ளப்படும்.

## 7) சென்னையில் கடல் ஆமைகள் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு மையம் ஏற்படுத்தப்படும்.

கடற்கரைப் பகுதிகளில் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும் ஆமையினங்களில் ஒன்றான சித்தாமையின் (Olive Ridley Turtle) முக்கிய இருப்பிடமாக தமிழ்நாடு கடற்கரை விளங்குகிறது. ஆமைகள் பாதுகாப்பு முயற்சிகளை ஊக்கப்படுத்த, சென்னையில் ரூபாய் 6.3 கோடி செலவில் சர்வதேச ஆமைகள் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு மையம் அமைக்கப்படும். இந்த மையம் கடல் ஆமைகள் குறித்த ஆராய்ச்சி, தரவு சேகரிப்பு மற்றும் பிற செயல்பாடுகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணிகளுடன் கடல் ஆமைகளின் பாதுகாப்பு முயற்சிகளை மேம்படுத்து வதற்கான ஒரு நவீன மையமாக இருக்கும். இந்த மையம் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு முகமை மற்றும் தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் "காலநிலை மாற்றத்திற்கான பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் பசுமைத்திட்டம்" மூலம் மேற்கொள்ளப்படும்.

8) அடையாறு, கூவம் ஆறுகள் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றின் கரைகளில் பசுமைத் தோட்டங்கள் ஏற்படுத்தப்படும்.

நகர மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பசுமைப் பரப்பை அதிகரிக்க 3.42 கோடி மரக்கன்றுகள் ரூபாய் 237 கோடி செலவில் அடையாறு, கூவம் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய்க் கரைகளில், கரிம உள்ளிருப்பு விளைவுகளுக்காகவும், வெப்பமயமாவதின் விளைவினை குறைக்கும் நோக்கத்துடனும், கரையோர பசுமைத் தோட்டங்கள் உருவாக்கப்படும். இந்த பசுமைத் தோட்டங்கள் அமைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக உகந்த உள்ளூர் மர இனங்கள் மட்டுமே கரையோரங்களில் நடப்படும். இந்த முயற்சி ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு முகமை மற்றும் தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் "காலநிலை மாற்றத்திற்கான பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் பசுமைத்திட்டம்" மூலம் மேற்கொள்ளப்படும்.

## 9) சூழல் சுற்றுலா சுற்றுத்தடங்கள் புதியதாக ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் மலைப்பகுதிகளில் உள்ள கீழ்க்கண்ட சூழல் சுற்றுலா பகுதிகள் உள்ளூர் சமூக பங்களிப்புடன் வனத்துறை மூலம் செயல்படுத்தப்படும்.

1. நீலகிரி மாவட்டம், கேத்தரின் நீர்வீழ்ச்சி.

2. திண்டுக்கல் மாவட்டம் தலைக்குத்து அருவி, பரப்பலாறு நீர்த்தேக்கம்.

3. குரும்பப்பட்டி – ஏற்காடு.

4. ஐயூர் – தேன்கனிக் கோட்டை- ஒக்கேனக்கல் நீர்வீழ்ச்சி.

5. கொல்லிமலை - ஆகாயகங்கை நீர்வீழ்ச்சி – ஏலகிரி மலை.

6. ஏலகிரி – அமிர்தி ஜமுனாமரத்தூர் பீமன் நீர்வீழ்ச்சி- குலர்குகை.

இச்சூழல் சுற்றுலா நடவடிக்கைகளை, நீடித்த நிலையான வகையில் மேற்கொள்ள, உள்ளூர் சமூகத்தின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியில் கவனம் செலுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், மாவட்ட நிருவாகம் மற்றும் உள்ளூர் சமூகத்துடன் இணைந்து சூழல் சுற்றுலா மேலாண்மைத் திட்டத்தை உருவாக்குவதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இத்திட்டம் ரூபாய் 14 கோடி செலவில் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு முகமை மற்றும் தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும், "காலநிலை மாற்றத்திற்கான பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் பசுமைத்திட்டம்" மூலம் மேற்கொள்ளப்படும்.

## 10) களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் உயிர்ப்பன்மை - ஆய்வகம் மற்றும் சுற்றுலா மையம் ஏற்படுத்தப்படும்.

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் ஏற்படுத்தப்படவுள்ள உயிர்ப்பன்மை ஆய்வகம் அதிநவீன பல்லுயிர் அருங்காட்சியகம், பதப்படுத்திய தாவர மாதிரிகள், மருத்துவ தாவரத் தோட்டங்கள் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப ஆய்வகங்கள் போன்றவைகளை உள்ளடக்கியதாக இருக்கும். உயிர்ப்பன்மை பாதுகாப்பின் முக்கியத்துவத்தை மக்கள் புரிந்துகொள்ள இந்த ஆய்வகம் ஒரு பயனுள்ள மையமாக இருக்கும். இந்த திட்டம் ரூபாய் 3.6 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

## 11) வனப்பகுதிகளில் உள்ள அந்நிய களைத்தாவர இனங்கள் அகற்றப்படும்.

வனப்பகுதிகளில் உள்ள அந்நிய களைத்தாவரங்களை அகற்றி அப்பகுதிகளில் சூழலினை மறுசீரமைக்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அந்நிய களைத்தாவர இனங்கள் மாநிலத்தின் பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு பெரும் சவாலாக உள்ளது. அவை சுற்றுச்சூழல் அமைப்பில் ஆதிக்கம் செலுத்தி உள்ளூர் தாவர இனங்களுக்கு தீங்கு விளைவிக்கின்றன.

இந்த முயற்சியின் கீழ் உண்ணி, சீமைக்கருவேல், நீலகிரி தைல மரம், சீகை, சென்னா போன்ற இனங்கள் அகற்றப்பட்டு, சூழலியல் மீளுருவாக்கத்தின் மறுசீரமைப்பு முயற்சியின் ஒரு பகுதியாக உள்ளூர் தாவர இனங்கள் நடப்படும். 2022-23 ஆம் ஆண்டில் இந்த பணிகளுக்காக ஏற்கெனவே அரசால் 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, ரூபாய் 17.42 கோடி செலவில் இப்பணிகள் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு முகமை மற்றும் தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும், "காலநிலை மாற்றத்திற்கான பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் பசுமைத்திட்டம்" மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

## 12) வனத்துறையின் மேலாண்மை செயல்பாடுகள் மற்றும் சேவைகளில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல்.

வனத்துறையின் மேலாண்மை செயல்பாடுகள் மற்றும் சேவைகளில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்த ரூபாய் 37 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். அரசு-அரசு சேவைகள் (G2G), அரசு-மக்கள் சேவைகள் (G2C) மற்றும் அரசு-வணிக சேவைகள் (G 2 B ) தொடர்பான செயல்பாடுகள் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு முகமை மற்றும் தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும், "காலநிலை மாற்றத்திற்கான பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் பசுமைத்திட்டம்" மூலம் மேற்கொள்ளப்படும்.

இந்த புதிய தொழில்நுட்ப சேவைகளானது அரசு, மக்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு இடையே தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்த உதவும். மேலும் இந்நிதியானது புவித்தரவு மேலாண்மை, தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகளில் வன ஊழியர்களின் திறனை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும்.

## 13) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் சோலைக்காடுகள் பாதுகாப்பு மையம் அமைக்கப்படும்.

நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் சோலைக்காடுகள் பாதுகாப்பு மையம் ஒன்று அரசால் அமைக்கப்படும். இந்நகரில் உள்ள லாங்வுட் சோலைக்காடுகள், நகர பகுதிகளில் அமைந்துள்ள அடர்ந்த சோலை காடுகளின் எஞ்சிய பகுதிகளில் ஒன்றாகும். லாங்வுட் சோலை எளிதில் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும். சுமார் 116 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்ட லாங்வுட் சோலைக்காடுகள் உள்ளூர் சோலை மரங்களின் புதையல் ஆகும், சோலைக்காடுகள் தனித்துவமான சூழலை வழங்குவதோடு, பல உள்ளூர் உயிரினங்களின் தாயகமாக மட்டுமல்லாமல், பல கிராமங்களுக்கு உயிர் ஆதாரமாகவும் உள்ளது. இதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு

இம்மையம் ரூபாய் 5.2 கோடி செலவில் அமைக்கப்படும். இதன் பாதுகாப்பு முயற்சிகளில் உள்ளூர் மக்கள் ஈடுபடுத்தப்படுவர். லாங்வுட் சோலைப் பாதுகாப்பு மையத்தில் தகவல் மையம், நூலகம் மற்றும் பதப்படுத்திய தாவர மாதிரிகள் உருவாக்கப்படும். லாங்வுட் சோலையை "குயின்ஸ் காமன்வெல்த் கேனோபி திட்டத்தில் (QCC)" சேர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும், இது அறிவுப் பரிமாற்றத்தை எளிதாக்குவதற்கும், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும், வனப் பாதுகாப்பிற்கு புதிய கூட்டு முயற்சிகளை உருவாக்குவதற்கும் சிறந்த முன்னெடுப்பாக அமையும்.

**கா. ராமச்சந்திரன்**
வனத்துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.



அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.